**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 66 /2023 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
| பெயர் : ஜெயபிரியா | அ.சா. 8 | நாள் : 06.02.2026 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் OATH Act 4 வது பிரிவின் படி திரு.சுனில்குமார், கிரேடு 3 பென்ச் கிளர்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயபிரியா | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | மணிபூசன் | தொழில் | : | டாக்டர் |
| கிராமம் | : | திருவள்ளூர் | வயது | : | 43 |

**(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவகல்லுரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2018 அன்று பொன்னேரி மருத்துவமனையில் 24 மணிநேர பணியின் இருந்தபோது அதிகாலை 16.07.2018 அன்று 12.50 மணிக்கு சுகுந்தன் வயது 40 த/ப. செஙகல்வராயன் எண்.41 பெருமாள் கோவில்தெரு மீஞ்சுர் வேளவச்சாவடி என்றும் விலாசத்தில் இருந்து அவரது மனைவி திருமதி ராஜேஷ்வரி என்பவருடன் சிகிச்சைக்காக பொன்னேரி அரசு மருத்துமவனைக்கு வந்தார். 15.07.2018 மாலை 06.00 மணியளவில் பொம்மாஜி குளம் என்றும் இடத்தில் அவருக்கு தெரிந்த ஆண் நபர் சுரேஷ் என்பவரால் உருட்டுகட்டையால் தலையில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு உச்சந்தலையில் இருந்து பின்புற தலை வரை ஆழமான சிதைந்த கயம் 5x4x2 cm அளவில் காணப்பட்டது. சிவந்த

நிலையில் இருந்தது. அதற்கு பொன்னேரி அரசு மருத்துவமனையில் முதலுவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக ஸ்டேன்லி மருத்துவமனைக்காக பரிந்துரை செய்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு எண். 879 நான் அளித்தது தான். **அது அ.த.சா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் 16.07.2018 அன்று அதிகாலை 12.25 மணிக்கு திருமலை வயது 27 த/பெ.கிருஷ்ணன் சூளைமேணி பஞ்சாயத்து கையடை கிராமம் என்ற முகவரியை சேர்ந்த நபர் அவரது தாயார் திருமதி சகுந்தலா என்பவருடன் சிகிச்சைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு வந்தார். 15.07.2018 மாலை 06.00 மணியளவில் பொம்மாஜி குளம் என்ற இடத்தில் அவருக்கு தெரிந்த ஆண் நபர் சுரேஷ் என்பவரால் உருட்டுகட்டையால் தாடை , இடது பக்க கழுத்து மற்றும் காதில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு வாய், இடது பக்க காதிலிருந்து இரத்த கசிவு இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1. இடதுபக்க தாடை சிவந்த நிலையில் இருந்தது அது உடைந்திருக்கலாம், 2. சிராய்ப்பு காயம் 3x2 cm அளவில் இடது பக்க காதில் காணப்பட்டது. 3. இடதுபக்க காலர் எழும்பில் சிராய்ப்பு காயம் இருந்தது. அதற்கு முதலுவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக ஸ்டேன்லி மருத்துவமனைக்காக பரிந்துரை செய்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு எண். 878 நான் அளித்தது தான். அது **அ.த.சா.ஆ.5 என குறியீடு செய்யப்படுகிறது**. .

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இரண்டு நபர்களுக்கும் நான் தான் முதலுதவி சிகிச்சை அளித்தேன். மேற்படி நபர்களுக்கு காயம் தொடர்பான கருத்துரை வழங்கவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் காயத்தின் வயது, (எவ்வளவு நேரத்திற்கு முன்னர் நடந்திருக்கலாம்) என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ஆனால் காயம் சிவந்திருந்தது பற்றி குறிப்பிட்டுள்ளேன். காயம்பட்ட நபர்கள் முதன்முதலில் என்னிடம் தான் சிகிச்சைக்கு வந்தார்கள் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றாலும் அவ்வாறு என்னிடம் தான் முதன்முதலில் வந்தார்கள் என்று என்னால் கூறமுடியாது என்றாலும் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தார்கள். எப்போது என்னை போலிசார் விசாரித்தார் என்று எனக்கு நினைவு இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– ஜெய பிரியா

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.02.06 11:27:58 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி